# MIN ALAI

# மின் அலை

May 2021 | Volume : 9 | Issue 05 | Price Rs. 16.75/- | Ann. Sub. Rs. 200/-



**தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்றிருக்கும் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை பொறியாளர் சங்கம் வாழ்த்தி வரவேற்கிறது.**




**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**

பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

தலைவர் **பொர்.A.அந்தோணிபடோவராஜ்**

பொதுச் செயலாளர் **பொர்.V.S.சம்பத்குமார்**

பொதுப் பொருளாளர் **பொர்.G.கார்த்திகேயன்**



தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனராக பொறுப்பேற்றிருக்கும்

திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப

அவர்களை பொறியாளர் சங்கம் வாழ்த்தி வரவேற்கிறது.




தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனரை 24.05.2021 அன்று சந்தித்து வாழ்த்து தெரிவித்த நமது பொதுச் செயலாளர் மற்றும் பொதுப் பொருளாளர்

ஆசிரியர்
பொர். N.R.செந்தில்
9499014992

## ஆசிரியர் குழு

பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.G.கார்த்திகேயன்
பொர்.R.K.நரசிம்மன்
பொர்.R.சந்தோஷ்குமார்
பொர்.S.பாலாஜி

| Page | Contents |
|---|---|
| 07 | Our representations |
| 10 | மின்சார சட்ட முன்வடிவு 2021 – ஒரு பார்வை |
| 13 | Unite against Privatisation, Public meeting |
| 17 | உங்களுக்கு ஓர் நினைவூட்டல் – விடுப்பு |
| 20 | மின் விபத்தினை தடுப்போம் |
| 24 | வெற்றி சிந்தனைகள் |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9841150516**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 09 மே 2021 இதழ் 05

## தேவை, உழைப்புக்கான அங்கீகாரம்

கோவிட் ஒரு சோதனை தேர்வு என்றால் மின்சார வாரியம் அதில் சிறப்பான தேர்ச்சி பெற்றிருக்கிறது. கோவிட் தொற்று நோய் காலங்களில் தொலைத் தொடர்புத் துறையும் மின்சாரத் துறையும் இணைந்து, நாட்டின் பொருளாதாரத்தினை இயக்கத்தில் வைக்கவும், மக்களின் வாழ்வாதாரத்தினை காத்திடவும், முக்கியமான பங்காற்றி வருகிறது.

சென்ற ஆண்டில், முதல் கோவிட் தொற்று முடிந்த பின்னர் மின் தேவையில் ஒரு மிகப் பெரிய, எதிர்பார்க்காத வளர்ச்சி காணப்பட்டது. நமது மின் வாரிய அலுவலர்களும் பணியாளர்களும் தொடர்ந்து அயராமல் செயல்பட்டு வந்ததால்தான் உயர்ந்து வந்த மின் தேவையை எளிதாக சமாளித்து கடந்து செல்ல முடிந்தது. இது மின் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் கரி அள்ளும் கடைநிலை பணியாளர் முதல், வீடுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும், வணிக பயன்பாட்டாளர்கள் மின்சாரம் தடைபடும் போதெல்லாம் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது, உடனடியாக சரிசெய்யும் கடைநிலை விநியோகப் பணியாளர் வரையிலான தன்முனைப்பு மிக்க பணிகளால் தான் சாத்தியமாகிற்று.

தற்போது கோவிட் கொள்ளை நோயின் இரண்டாம் அலையின் தாக்கம் அதிகமாக உள்ளதை, நம் அருகில் இருப்பவர்கள் பலர் பாதிக்கப்படுவதின் மூலம், நாம் உணர முடிகிறது. களஉதவியாளர் முதல் தலைமைப் பொறியாளர் வரையிலான 200 க்கும் மேற்பட்ட நமது மின்வாரியப் பணியாளர்கள் கொள்ளை நோய் தொற்று நோய்க்கு பலியாகிய செய்திகள் மிகுந்த வேதனை அளிக்கிறது.

தற்போது புதிதாக பதவி ஏற்றிருக்கின்ற தமிழக அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய வழிகாட்டுதல்களின்படி, கொள்ளை நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும்,

கண்காணிக்கவும் மாவட்டம் தோறும் ஒரு அமைச்சர், அரசு அதிகாரிகள் என நியமித்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மருத்துவத்துறையும், சுகாதாரத் துறையும் மேலும் பல துறைகளுடன் இணைந்து இந்த கொள்ளை தொற்றின் பாதிப்பை குறைக்க மிகவும் அரும்பாடுபட்டு வருகின்றன.

பல துறைகளிலும் முதன்மையாக, பெரு நகரங்கள் முதல் கிராமங்கள் வரை உள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும், இன்று மிக அத்தியாவசிமான ஆக்ஸிஜன் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கும், தொடர்ந்து செயல்படும் அத்தியாவசிய தொழிற்சாலைகளுக்கும், பணியாளர்கள் வீடுகளிலிருந்து செயல்படும் IT நிறுவனங்களுக்கும், வீடுகளில் உள்ளேயே இருந்து தங்களையும் பிறரையும் பெருந்தொற்றிலிருந்து காத்துக் கொண்டிருக்கும் பொதுமக்களுக்கும், 24 மணி நேரமும் தடையற்ற மின்சாரத்தை வழங்கி, பொருளாதாரத்தினை இயக்கத்தில் வைத்தும், மக்களின் வாழ்வாதாரத்தினை காத்தும், முக்கியமான பங்காற்றி வருவது தமிழ்நாடு மின்சார வாரியமாகும்.

எந்த சூழ்நிலையிலும், Containment Zone என்றும் கொரோனா தொற்று பாதித்தவர்கள் வீடு என்றும் பார்க்காமல், பகல் இரவு என்ற எந்த நேரத்திலும், சுகாதாரமான இடமா இல்லையா என்றும் பார்க்காமல், மின்தடை புகார் அளிக்க வரும் நுகர்வோர்களை தவிர்த்திடாமல் நேரில் சந்தித்து குறைகளை கேட்டும், அனைத்து நுகர்வோர்களுக்கும் 24 மணி நேரமும் தடையற்ற மின்சாரம் வழங்குவதற்காக, தங்கள் உயிரையும் பணயம் வைத்து வேலை செய்யும் தமிழக மின்சார வாரியப் பணியாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவிக்கவேண்டிய அவசியமும் அவசரமும் உள்ளது.

தமிழக மின்சார வாரியப் பணியாளர்களையும், பொறியாளர்களையும் முன்களப் பணியாளர்களாக அறிவித்து, அதற்குண்டான அனைத்து பயன்களையும் மின்சார வாரியப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு உறுதி செய்வது இன்றைய காலக்கட்டத்தின் அவசியமான, அவசரமான செயல்பாடாகும். மின்சார வாரியப் பணியாளர்களுக்கு இந்த இக்கட்டான நேரத்தில் தமிழக அரசு உதவிடுவது அவர்களை மேலும் சிறப்பாக பணியாற்ற ஊக்கப்படுத்தும் சக்தியாகும்.

மின்சார வாரியப் பணியாளர்கள் கேட்பது தங்கள் வேலைக்கான நியாயமான அங்கீகாரம் மட்டுமே...

## பொதுச் செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே,
வணக்கம்.

தமிழகத்தில் கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலையின் தாக்கம் உச்சம் பெற்றிருக்கும் இந்த நெருக்கடியான வேளையிலும், ஊரடங்கு அமல்படுத்தப்பட்டிருக்கும் இக்கட்டான சூழ்நிலையிலும், கோடை காலத்தின் உச்சப்பட்ச மின் தேவையை நுகர்வோருக்கு எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து தடையில்லா மின்சாரம் வழங்கியும், மருத்துவமனைகள், ஆக்ஸிஜன் உற்பத்தி தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்கு தொடர்ந்து 24 மணி நேரமும் தடையில்லா மின்சாரம் வழங்கி உன்னத சேவையாற்றி வரும் நம் பொறியாளர்கள் பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெருக்கடியான இந்த தருணத்தில் தமிழகத்தில் புதிதாக பதவியேற்றுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் பொறியாளர் சங்கம் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்

கொள்வதோடு தமிழக அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் மக்கள் நலத் திட்டங்களுக்கும் மின்சார வாரிய பணியாளர்களும், அலுவலர்களும், பொறியாளர்களும் உறுதுணையாக செயல்படுவோம் என்பதையும் மனதார மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தினம் தினம் பெருந்தொற்றுக்கு எண்ணிலடங்கா பணியாளர்களும், அலுவலர்களும், பொறியாளர்களும் உள்ளாகி வருவதும், அதில் பலரை நாம் இழந்து வருவதும் மிகுந்த வேதனை அளிக்கிறது.

01.05.2021 அன்று, மதுரை கிளையின் தலைவர் மற்றும் செயலாளர் பொறுப்புகளை வகித்த பொர்.M.சண்முகம், செயற் பொறியாளர் (ஓய்வு) அவர்களையும், 14.05.2021 அன்று நமது சங்கத்தின் அலுவலகச் செயலாளரும், சென்னை மேற்கு கிளையின் செயலாளருமான பொர்.K.அன்பரசு அவர்களையும் இந்த கொரோனா பெருந்தொற்றிற்கு நாம் இழந்திருக்கின்றோம்.

பொறியாளர் சங்கம் ஒரு இக்கட்டான சோதனையை சந்தித்த காலங்களில் மதுரை கிளையிலும், மதுரை மண்டலத்திலும் பொறியாளர் சங்கத்தினை வலுப்படுத்தியதில் பொர்.M.சண்முகம் அவர்கள், பொர்.S.வீரப்பன், முன்னாள் மண்டலச் செயலாளர் அவர்களோடு இணைந்து ஆற்றிய பங்கு மகத்தானது. பொர்.M.சண்முகம் அவர்கள் அனைவரோடும் எளிதில் பழகக்கூடியவர்.

அலுவலகச் செயலாளர் பொர்.K.அன்பரசு அவர்களுடன் இணைந்து பணியாற்றிய காலங்கள் மிகவும் போற்றுதலுக்குறியது. கட்டிட திறப்பு விழாவாகட்டும், சென்னையில் நடைபெற்ற மாநிலப் பொதுக்குழு கூட்டமாகட்டும், ஆண்டு தோறும் நடத்தப்படும் ரத்ததான முகாமாகட்டும் அல்லது வேறு எந்த சங்கத்தின் நிகழ்ச்சியாகட்டும் தானே பொறுப்புகளை ஏற்று அதை திறம்பட நடத்தி காட்டிடும் வல்லமை மிக்கவர். சென்னை மேற்கு கிளையின் செயலாளராக 10 ஆண்டுகளுக்கு மேல் பொறுப்பேற்று கிளையை திறம்பட வழி நடத்தியவர். எப்போழுதும் அனைவரிடமும் இன்முகத்தோடே பழகக்கூடியவர். நல்ல படிப்பாளர்.

மதுரை கிளையின் முன்னாள் தலைவர் பொர்.M.சண்முகம் மற்றும் அலுவலகச் செயலாளர் பொர்.K.அன்பரசு, இந்த இருவரின் இழப்பு அவர்களது குடும்பத்திற்கும் பொறியாளர் சங்கத்திற்கும் ஓர் பேரிழப்பாகும். அவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பினை தாங்கக் கூடிய மனோபலத்தை தர இறைவனிடம் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

கொரோனா பெருந்தொற்றினை வென்றிட, தமிழக அரசு எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும், ஒட்டு மொத்த தமிழகமும் கைகோர்த்து போராடி வரும் இந்த வேளையில், மருத்துவமனைகளுக்கும், ஆக்ஸிஜன் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கும், அத்தியாவசிய தொழிற்சாலைகளுக்கும், அனைத்து பொது மக்களுக்கும் தடையில்லா மின்சாரம் வழங்கி, நுகர்வோர் குறைகளை உடனுக்குடன் களைய, தங்கள் உயிரையும் துச்சமென நினைத்து இரவு பகலாக பணியில் ஈடுபட்டுள்ள மின்சார வாரியப் பணியாளர்களின் பங்கு இன்றியமையாதது.

இதனை கருத்தில் கொண்டு மின்சார வாரியப் பணியாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவிக்கக் கோரி மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தொழிற்சங்கக் கூட்டு நடவடிக்கைக் குழுவின் சார்பாக 11.05.2021 அன்று முறையீடு அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் அவர்களை மின்வாரியத் தலைமை அலுவலகத்தில் 23.05.2021 அன்று கூட்டு நடவடிக்கைக் குழுவின் சார்பாக சந்தித்த போது மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர்

அவர்கள் கோப்பு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பரிசீலனையில் இருப்பதாக தெரிவித்தார்.

பெருந்தொற்று வேகமாக பரவி வரும் இக்காலத்தில், தடையில்லா மின்சாரம் வழங்கும் அத்தியாவசிய பணியினைத் தவிர, வேறு திட்டங்கள் சார்ந்த பணிகள் மேற்கொள்ள நிர்பந்திப்பதையும், தொடர்ந்து ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதயைும் தாற்காலிகமாக நிறுத்தி வைத்திட வாரியத் தலைவர் அவர்களிடம் முறையீடு அளிக்கப்பட்டது. நமது முறையீட்டினை தொடர்ந்து உரிய உத்திரவுகள் வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

2012ம் ஆண்டிற்கான உதவிப் பொறியாளர் (இயந்திரவியல்) முன்னுரிமை பட்டியல் வாரியத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இளநிலை பொறியாளர் (சிவில்) இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலைக்கான பதவி உயர்வுக்கு இரண்டு நபர்களுக்கு தகவல்கள் கேட்கப்பட்டுள்ளது. உரிய காலத்திற்குள் (05.06.2021) தகவல் அனுப்பிட சம்மத்தப்பட்ட கிளைப் பொறுப்பாளர்கள் நடவடிக்கை எடுத்திட கேட்டுக் கொள்கிறேன். இளநிலை பொறியாளர் (சிவில்) இரண்டாம் நிலை மற்றும் உதவிப் பொறியாளர் உள்முகத் தேர்வு ஆகிவற்றிற்கான தகவல்கள் விரைவில் கேட்கப்படும்.

நமது மின்சார வாரியத்திற்கு தலைவராக திரு.ராஜேஷ்லக்கானி, இ.ஆ.ப அவர்கள் நியமிக்கப்பட்டு கடந்த 17.05.2021 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார்கள். 24.05.2021 அன்று புதிய வாரியத் தலைவரை, பொதுப் பொருளாளருடன் சென்று மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்தோம். சந்திப்பின் போது ERP யினை செயல்பாட்டிற்கு கொண்டு வருவதை தள்ளி வைப்பது, பகுதி பகுதியாக அதனை செயல்பாட்டிற்கு கொண்டு வருவது, வெளி மாநிலங்களில் உள்ள நிலக்கரி சுரங்கங்களுக்கு மாதிரி சோதனை செய்ய பொறியாளர்கள் மற்றும் கெமிஸ்ட்டுகளை அனுப்புவதை நிறுத்தி வைப்பது, உதவி செயற் பொறியாளர் (இயந்திரவியல்) பேனல் நீட்டிப்பு செய்வது, உதவிப் பொறியாளர் உள்முகத் தேர்வு, வேலைப் பளு ஒப்பந்தத்தின் படி துணை மின் நிலையங்களுக்கான பதவிகள் நீண்டகாலமாக அனுமதி அளிக்கப்படாமல் இருப்பது, MTPSல் தற்போது தகுந்த காரணமின்றி வழங்கப்பட்டுள்ள நிர்வாக ஊர் மாறுதல் உத்திரவுகளை ரத்து செய்வது, 01.01.2021 விருப்ப ஊர்மாறுதல் விண்ணப்பம் அளிக்கப்பட்டு நிலுவையில் உள்ளவற்றை வழங்கிடுதல் ஆகியவை குறித்து முறையிடப்பட்டுள்ளது.

24.05.2021 அன்று தளர்வுகள் அற்ற முழு ஊரடங்கின் போது எந்தவித இடையூறுமின்றி, மின்சார வாரியப் பணியாளர்கள் பணிக்கு வருவதற்கு உரிய நடவடிக்கை எடுத்திட வாரியத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. வாரியத் தலைவர் அவர்களும் உடனடியாக இது குறித்து தமிழக காவல் துறை தலைவர் அவர்களிடம் கலந்து பேசி உரிய நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் நமது நலமும் நமது குடும்பத்தினரின் நலமும் மிகவும் முக்கியம். ஆகவே அரசு அறிவித்துள்ள அனைத்து பாதுகாப்பு நடைமுறைகளையும் பின்பற்றி பாதுகாப்பாக பணிபுரிவோம். கொரோனா பெருந்தொற்றினை வென்றிட அரசுடன் கைகோர்ப்போம்.

நன்றி.

பொர்.V.S.சம்பத்குமார்,
பொதுச் செயலாளர்.

***<u>Our representations:</u>***

To

**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR**,

TANGEDCO,

<u>Lr.No.GS/TNEBES/F1/D.186 /2021, Dt. 24.05.2021</u>

Respected Sir,

Sub: Engineers and Junior Chemists deputed to various coal mines – COVID pandemic severe in those areas - Suspension of Coal Sampling and Inspection activities and withdrawal of our Employees immediately – Requested regarding.

Ref: Memo No. Dir/Gen/CE/Coal/SE/Mech./E1/A2/F.TPS/D22/2020 Dt: 20.03.2020

---------

Engineers and Junior Chemists of Thermal Power Stations are deputed to various Coal mines of ECL, MCL and CCL at Talcher, IB Valley, Singareni and various other places on cyclic rotation for a stipulated period continuously.

Presently due to the havoc caused by the $2^{nd}$ wave of COVID the Engineers and Junior Chemists are panic stricken as the conditions over there is quite abnormal.The Medical facilities too are quite minimal and nonexistent in many places. Not only are their lives endangered but their families too are put under great stress as there wouldn't be anyone to look after them during this pandemic period.

On such occasions earlier, Board had temporarily suspended this Coal Sampling exercise during Dengue fever in 2011 and during the $1^{st}$ wave of COVID pandemic last year. Board had recalled our Employees who were stationed away as a precautionary measure and kept the exercise under suspension until restoration of normalcy. Concerned order is cited under reference.

We request the Respected Chairman cum Managing Director to take a similar decision and order withdrawal of the Engineers and Junior Chemists stationed at various mines immediately thereby saving the precious lives of our Employees and bringing relief to their families too please.

Thanking You, Sir,

Yours sincerely,

**V.S. SAMPATHKUMAR**

General Secretary.

----

To

**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR**,

TANGEDCO,

<u>Lr.No.GS/TNEBES/F1/D.187/2021, Dt. 24.05.2021</u>

Respected Sir,

Sub: Inadequacy in ERP implementation due to various shortfalls – Implementation to be delayed and implemented later in a phased manner – Intervention of the respected Chairman cum Managing Director necessitated – represented regarding.

Ref: Lr.No.GS/TNEBES/F1/D. 184/2021, Dt. 28.04.2021

----------

Greetings and Wishes to the respected Chairman cum Managing Director for having taken charge of this gigantic organisation which serves quality power to the Industries and General Public. We TNEB Engineers' Sangam, a recognised Trade union representing the cause of around 7000 Diploma Engineers and Junior Engineers would extend our fullest cooperation on the steps taken by the Management towards the betterment of the Board and the welfare of the General Public.

COVID pandemic is showing its monstrous face gobbling up the precious lives of humans at a fast pace. Government is taking up valiant efforts of precaution and safety during this pandemic period,

for which our Board Employees too are putting up their valuable contribution to tide over this difficult period. Day in and day out we are losing numerous Staff and Engineers continuously due to COVID.

To ensure safety of our Board Employees and to maintain uninterrupted power supply during this pandemic, we had represented earlier requesting the Administration to switch over to emergency mode, giving priority to breakdown works alone and to stall improvement works temporarily vide our representation cited under reference.

We sincerely thank the administration for implementing our request partially. Yet our request to delay the implementation of ERP hasn't been considered. While we wholeheartedly support the implementation and updation of e-office of any sort including ERP, we feel with concern that this is not the right period for implementing it and hence requested for its postponement.

We are pained to say that, the ego of few upper Echelons of the Board is playing a part and have decided not to consider its postponement. Engineers and Staff at field are almost getting crushed by their Officers causing huge concern during this pandemic.

We request postponement of ERP due to the following reasons.

- Adequate training is yet to be imparted to all Staff and Engineers who are going to handle it at the field.
- Capacity of Servers to be enhanced which is presently inadequate. (The server should be one similar to the railways which handles the peak tatkal booking with ease.)
- Service support provided by the firm supplying ERP is almost nil as they aren't able to cope up due to pandemic.
- Customizing the ERP system with the prevalent practice in the field is yet to be fulfilled leading to mismatch and chaos.
- Provisioning of users is quite inadequate forcing many to use the same user leading to insecurity and malpractice.
- Routine works are either stalled or delayed which may lead to huge problems on longer run.

We request the Respected Chairman cum Managing Director to take a stern decision in this ERP implementation matter, favouring our representation by

- Postponing the implementation process for few months until normalcy is restored.
- Implement it in a phased manner by improving the requirements, until then by continuing the existing IMS process.
- Call us for a discussion in this regard to ascertain the field realities and conditions.

and ensure smooth functioning of the Board and Field Offices during this pandemic period and thus render justice please.

Thanking You, Sir,

Yours Sincerely,
**V.S.SampathKumar**
General Secretary

----

To
**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**
TANGEDCO,
Lr.No.GS/TNEBES/F1/ D.188 /2021, Dt. 24.05.2021

Respected Sir,

Sub: Panel approved for the promotion of Assistant Executive Engineer / Mechanical posts – Extension of panel's validity - Requested Reg.

Ref: 1.(Per.)CMD TANGEDCO Proceedings No.31 Dated: 12.02.2020
2. Lr.No.GS/TNEBES/F1/ D 167/2021, Dt. 04.02.2021
3.(Per.)CMD TANGEDCO Proceedings No.103 Dt, 06.05.2021

---

Promotion Panel for the post of Assistant Executive Engineer / Mechanical was approved vide reference – 1 cited above. Among the approved panel for 88 persons, promotion orders were issued for 53 persons so far.

Vide our representation cited under reference – 2 we had requested for filling up of the vacant Assistant Executive Engineer / Mechanical posts and to extend the validity period of the panel which is pending consideration. The validity period of another such promotion panel for the post of Executive Engineer / Electrical has been extended vide reference – 3 cited.

Similar decision on the Assistant Executive Engineer / Mechanical panel may also be taken by extending its validity period benefitting the individuals who have been starved of their promotion for quite some time.

We request the intervention of the respected Chairman cum Managing Director in this matter and to instruct the Officials concerned on extension of Assistant Executive Engineer / Mechanical panel, thus render justice please.

Thanking You, Sir,

Yours Sincerely,
**V.S. SAMPATHKUMAR**
General Secretary.

----

To
**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**
TANGEDCO,
Lr.No.GS/TNEBES/F1/D.189/2021, Dt.24.05.2021.

Respected Sir,

Sub: Calling for of Applications from eligible employees for Assistant Engineer/Electrical, Mechanical and Civil Promotions through Internal Selection –Requested - Regarding.

Ref: D64 /2020, Dt. 11.03.2020, D73 /2020, Dt. 15.04.2020, D103 /2020,Dt. 22.07.2020, D126 /2020, Dt. 16.09.2020,D153 /2021, Dt.08.01.2021, D 175/2021, Dt. 17.02.2021.

---

Assistant Engineer posts are filled up in the Board through Direct Recruitment and by Internal Selection as per the Regulations in the ratio of 1:1.

While the process for the recruitment of Assistant Engineers / Electrical, Mechanical and Civil through Direct Recruitment had been initiated long ago the process for Internal Selection is yet to be initiated. The process of Direct Recruitment and Internal selection has been done simultaneously in the recent past as per the direction of the Hon'ble High Court.

The matter has been represented numerous times vide references cited above and yet to be considered. We reiterated this matter to the Respected Chairman cum Managing Director during the discussion held with us on 17.02.2021.

Respected Chairman cum Managing Director had instructed the Chief Engineer / Personnel in our presence during that discussion and assured us of a calling for immediately. The matter is still pending initiation.

Hence we request the Respected Chairman cum Managing Director to instruct the Chief Engineer / Personnel yet again to invite applications from the eligible employees for promotion to the post of Assistant Engineer / Electrical, Mechanical and Civil through Internal selection as per the prevalent regulation and Court directions and thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,
**V.S. SAMPATHKUMAR**
General Secretary.

# மின்சாரச் சட்டம் திருத்த முன்வரைவு 2021

**2003 மின்சாரச் சட்டத்தில், கீழ்கண்ட திருத்தங்கள் கொண்டு வரப்படவிருக்கின்றன.**

1. பயனீட்டாளர் தனக்கு விருப்பமான மின்விநியோகம் செய்பவரை தேர்ந்தெடுக்க, அந்தப் பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட விநியோக நிறுவனங்கள் செயல்பட வேண்டும். இதனால் வணிகப் போட்டி ஏற்பட்டு பயனீட்டாளர்களுக்கு அளிக்கப்படும் சேவையின் தரம் உயரும். தற்போது மின் விநியோகம் செய்யும் நிறுவனங்கள் அந்தப்பகுதியில் தொடர்ந்து மின் விநியோகம் செய்யலாம். புதிய நிறுவனங்களுக்கு அந்தப் பகுதியில் வந்து மின் விநியோக வணிகப்போட்டியில் ஈடுபடலாம். தகுதி உடைய நிறுவனங்களை மனு செய்த 60 நாட்களுக்குள் ஒழுங்கு முறை ஆணையம் பதிவு செய்யும். ஒழுங்குமுறை ஆணையத்தால் பதிவு செய்த மின் விநியோக நிறுவனங்கள், இந்தச் சட்டத்தின்கீழ் உள்ள விதிமுறைகளைப் பின்பற்றி மின் விநியோகம் செய்ய வேண்டும். நிறுவனங்களின் செயல்பாடுகளை, ஒழுங்கு முறை ஆணையம் மேற்பார்வை செய்யும்.

2. 2018ம் ஆண்டு உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, சட்டத்துறை நிபுணர் ஒருவர், ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினராக நியமிக்கப்படுவார். மின் உற்பத்தி நிறுவனங்களுக்கும், விநியோக நிறுவனங்களுக்கும் உள்ள ஒப்பந்தங்கள் குறித்த வழக்குகளுக்கு விரைவாக தீர்ப்பு வழங்க தனியாக ஒரு அமர்வு (Seperate Bench) அமைக்கப்படும். ஒழுங்கு முறை ஆணையத்தில் ஒரு உறுப்பினர் கூடுதலாக நியமிக்கப்படுகிறார்.

3. மின்சார மேல் முறையீட்டு மன்றத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகிறது.

4. மின் விநியோக நிறுவனங்கள், தங்களது மின் சக்தி கொள்முதலில் குறிப்பிட்ட அளவு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் மூலம் (சூரிய ஒளி, காற்றாலை) உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை வாங்க வேண்டும். அவ்வாறு வாங்காத, விநியோக நிறுவனங்கள் மீது தண்டத் தீர்வை (Penalty) விதிக்கப்படும்.

<u>சட்டத்தின் முக்கியப் பிரிவுகள்:</u>

<u>மின் விநியோக நிறுவனம்</u>

மாநில ஒழுங்குமுறை ஆணையம், நிர்ணயித்துள்ள தகுதி கொண்டு, ஆணையத்தில் பதிவு செய்து கொண்டுள்ள எந்த நிறுவனமும், மின் விநியோகம் செய்யலாம். தன்னுடைய சொந்த விநியோக கட்டமைப்பின் மூலமாகவோ அல்லது அந்தப் பகுதியில் முன்னதாக உள்ள மற்ற நிறுவனத்தின் கட்டமைப்பைப் பயன்படுத்தியோ மின் விநியோகம் செய்யலாம்.

ஒரே பகுதியில், ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் பதிவு செய்து கொண்டு, மின் விநியோக வணிகத்தை மேற்கொள்ளலாம். பதிவு செய்து கொண்டுள்ள ஒரு மின் விநியோக நிறுவனம், ஒரு குறிப்பிட்ட பகுதியில், மற்றொரு நபரை வைத்து மின் விநியோகம் செய்ய விரும்பினால், மற்றொரு நபர் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. கிராமப் பகுதிகளில் மின் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய தனியாக பதிவு செய்து கொள்ள வேண்டியதில்லை.

பதிவு செய்வதற்காக கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தின் மீது 60 நாட்களுக்குள், ஒழுங்கு முறை ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மனுக்கள் மீது, எந்த ஆணையும் பிறப்பிக்கப்படாவிட்டால், மனு ஏற்றுக் கொண்டதாகக் கருதப்படும்.

பாதுகாப்புத் துறையைச் சார்ந்த அமைப்புகள் இருந்தால், மத்திய அரசின் அனுமதியுடன், விநியோக நிறுவனம் பதிவு செய்யப்படும்.

விநியோகப் பணிகளை சரிவர செய்யாத நிறுவனங்களின் பதிவை, 3 மாத எச்சரிக்கை கடிதம்

கொடுத்து, ஒழுங்குமுறை ஆணையம் ரத்து செய்யலாம்.

இந்தியாவில் உள்ள Regional, State Load Despatch Centreகள் அனைத்தும் National Despatch Centre கட்டுப்பாட்டுக்குள் இயங்கும். முன் பணம் செலுத்தாவிட்டால் அல்லது அதற்கான உறுதி பத்திரம் அளிக்காவிட்டால் மின் சக்தி அளிக்கப்பட மாட்டாது.

பிரிவு **43** : தற்போது இயங்கிவரும் மின் விநியோக நிறுவனம், பதிவு செய்து கொண்டுள்ள மற்ற நிறுவனங்களுக்கு தன்னுடைய விநியோக கட்டமைப்பை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டும். ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயிக்கும் Wheeling Charges, மற்ற கட்டணங்களை புதிய நிறுவனங்கள் செலுத்த வேண்டும். தற்போதுள்ள நிறுவனம், புதிய நிறுவனங்களுக்கு கட்டமைப்புகளை பயன்படுத்த அனுமதிக்காவிட்டால், அதன் மீது ஒழுங்குமுறை ஆணையம் நடவடிக்கை எடுக்கும்.

தற்போதுள்ள மின் விநியோக நிறுவனங்கள் செய்து கொண்டுள்ள மின் சக்தி வாங்கும் ஒப்பந்தங்கள் தொடரும். அதிக மின் சக்தி தேவைப்பட்டால், புதிய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம்.

<u>மின்கட்டண நிர்ணயம்:</u>

ஒழுங்கு முறை ஆணையம் வகுத்துள்ள நடைமுறைகளின்படி, விநியோக நிறுவனம் மின்கட்டண நிர்ணயத்துக்கு மனு செய்ய வேண்டும். ஆணையம் **30** நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். **90** நாட்களுக்குள் ஆணை பிறப்பிக்கப்படாவிட்டால், புதிய கட்டணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட விநியோக நிறுவனங்கள் ஒரு பகுதியில் செயல்பட்டால், அவைகள் பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய உச்ச கட்டண விகிதத்தை, ஒழுங்கு முறை ஆணையம் நிர்ணயம் செய்யும்.

பிரிவு **91**: புதிய விநியோக நிறுவனங்கள் விதிமுறைகளின்படி, பயனீட்டாளர்களுக்கு சேவை செய்கின்றனவா என்பதைக் கண்காணிக்க, மாநில அரசின் அனுமதியோடு, ஒழுங்குமுறை ஆணையம் ஒரு குழுவினை அமைக்கும். இந்தக் குழுவினில் போதுமான எண்ணிக்கையில் அதிகாரிகளும், அலுவலர்களும் இருப்பார்கள்.

பிரிவு **142**: ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிமுறைகளை பின்பற்றாத நிறுவனங்கள் மீது புகார் செய்யப்பட்டு, அது நிரூபிக்கப்பட்டால் ஒருகோடி ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

மொத்த மின் சக்தி பயன்பாட்டில், ஒழுங்கு முறை ஆணையம் குறித்த அளவு புதுப்பிக்கத்தக்க வளங்களிடமிருந்து கிடைக்கும் மின்சக்தியை கொள்முதல் செய்யாவிட்டால் கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கப்படும். கொள்முதல் செய்ய தவறிய மின் சக்தி அளவிற்கு முதலாவது ஆண்டு யூனிட் ஒன்றுக்கு **25** பைசா முதல் **50** பைசா வரை, இரண்டாவது ஆண்டிலிருந்து யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை.

<u>சட்டம் குறித்த கருத்துக்கள்</u>

மின்சாரச் சட்டம் (திருத்தங்கள்) **2021**–ன் முன்வரைவின்படி, மாநில மின் விநியோக நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் மின்சக்தி, கொள்முதல் செய்யும் மின்சக்தியை மின் தேவை அதிகரிக்கும்போது அதற்கேற்ப மின்சக்தி கொள்முதல் செய்து அளிக்கப்படும்.

பயனீட்டாளர்களுக்கு தற்சமயம் மாநில மின் விநியோக நிறுவனங்களை இலவசமாகவும், மானியம் விலையிலும் மின் சக்தியை அளித்து வருகின்றன. **2013**ம் ஆண்டில் ஒரு யூனிட் மின் அளிப்புச் செலவு (Cost of Supply) சுமார் ரூ.**5.50**/– ஆகவிருந்தது. தற்போது இது ரூ. **10**/– வரை இருக்கக் கூடும். எனினும், தமிழ்நாட்டில் வீட்டுப் பயனீட்டாளர்களுக்கு அதிகபட்சமாக யூனிட் ஒன்றுக்கு ரூ.**5.50** (**500** யூனிட்டுகளுக்கு மேல்) கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது. மின் அளிப்புச் செலவுக்கும் – மின்

கட்டணத்துக்கும் உள்ள வித்தியாசம் மாநில அரசு அளிக்கும் மானியம், உயர் அழுத்த, வணிகப் பயனீட்டாளர்கள் இடம் இருந்து பெறப்படும் அதிகக் கட்டணம் (இடை மானியம்) மூலம் ஓரளவு குறைக்கப்படுகிறது. மத்திய மின் துறையின், தற்போதைய கொள்கைப்படி, மின் உற்பத்தி செலவுக்கு ஏற்ப, மின் கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டும். பயனீட்டாளர்கள் அந்தக் கட்டணப்படி, பணம் செலுத்த வேண்டும். மானியத்தொகை அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். ஒழுங்கு முறை ஆணையம் பதிவு பெற்ற விநியோக நிறுவனங்கள் விதிக்க வேண்டிய அதிகபட்ச கட்டணத்தை நிர்ணயம் செய்யும். தற்போது 150 யூனிட்டுகளுக்கு, 100 யூனிட் இலவச மின் சக்தி தவிர்த்து, 50 யூனிட்டுகளுக்கு ரூ. 120/– பயனீட்டாளர்கள் செலுத்துகிறார்கள். புதிய நடைமுறை அமுலுக்கு வந்தால், இவர் சுமார் ரூ. 1500/– செலுத்த வேண்டியிருக்கும். நடுத்தர, ஏழைப் பயனீட்டாளர்கள் பாதிக்கப்படுவார்கள். மானியத் தொகை இவர்களது கணக்கில் செலுத்தப்படுவதற்கு கால தாமதம் ஏற்பட்டால், இவர்கள் மின்சக்தி பயன்பாட்டை குறைத்துக் கொள்வார்கள் அல்லது தவிர்த்து விடுவார்கள். சமுதாய நலன் வெகுவாகப் பாதிக்கப்படும் நகர்ப்புறங்களில் பெரும்பான்மையானவர்கள், மின் சாதனங்களை பயன்படுத்தி வருகின்றனர். தனியார் மின் நிறுவனங்கள் தடையற்ற, தரமான மின்சக்தி கிடைக்கும் என்ற விளம்பர யுக்தியை நம்பி, அரசுத்துறை விநியோக நிறுவனத்தை விட்டு செல்ல நேரும். உயர் அழுத்த, வணிகப் பயனீட்டாளர்கள், இடை மானியம் இல்லாமல் கட்டணம் குறைவாக இருக்குமென்பதால், அவர்களும் அரசுத்துறை மின் கட்டமைப்பை விட்டுச்செல்லக் கூடும். இதனால் அரசுத்துறை விநியோக நிறுவனங்களின் வருவாய் வெகுவாகப் பாதிக்கப்படும். ஏழை, நடுத்தர வர்க்கப் பயனீட்டாளர்களுக்கு மானியங்கள் அளிப்பது இயலாமல் போகக்கூடும். அண்மையில் வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களின்படி, மார்ச் 2019 நிலவரப்படி தமிழ்நாடு விநியோக நிறுவனத்தின் கடன் அளவு ரூ. 1,13,438/– கோடி மொத்த இழப்பு ரூ. 12623/–. கோடி கோவிட்–19ன் பாதிப்புகளையும் சேர்த்தால், இந்த மதிப்பீடுகள் இன்றும் அதிகமாகக் கூடும்.

தமிழ்நாடு அரசின் 2020–2021ம் ஆண்டின் Revenue Defecit 21618 கோடியாகவும், Fiscal Defecit 59346 கோடியாகவும் இருக்குமென நிதி நிலையில் கூறப்பட்டுள்ளது. மின் விநியோகத்தில் தனியார் நிறுவனங்களை அனுமதிக்கும்போது, உபரியாகும் பொறியாளர்கள், தொழிலாளர்கள், அலுவலர்கள் பணி நிலை குறித்து ஏதும் கூறப்படவில்லை. அலுவலர்கள் பணி நிலை குறித்து ஏதும் கூறப்படவில்லை. விநியோகக் கட்டமைப்பில் பழுது ஏற்பட்டால் அதற்கு யார் பொறுப்பேற்பது என்பது குறித்தும் குறிப்பிடப்படவில்லை. புதுப்பிக்கத்தக்க எரி சக்தி வளங்கள் மூலம் கிடைக்கும் மின்சக்தியை குறிப்பிட்ட அளவு விநியோக நிறுவனங்கள் கொள்முதல் செய்ய வேண்டுமென திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அரசுத்துறை மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியின் விலை குறைவாக இருந்தாலும், அதைத் தவிர்த்து விலை அதிகமான சூரிய ஒளி, காற்றாலை மின்சக்தி ஆகியவற்றை வாங்க வேண்டிய சூழல் ஏற்படும். சில ஆண்டுகளுக்கு முன்னர் சூரிய ஒளி மின்சக்தியின் விலை யூனிட் ஒன்று ரூ.5/– வரை இருந்தது. அப்போது பல மாநில மின் விநியோக நிறுவனங்கள் அந்த விலைக்கு மின் சக்தி வாங்க ஒப்பந்தங்கள் செய்து கொண்டன. தற்போது விலைகுறைவாக இருந்தாலும், பழைய ஒப்பந்தங்களில் கண்டுள்ள விலைக்கே சூரிய ஒளி மின்சக்தியை வாங்க வேண்டும். இது மின் விநியோக நிறுவனங்களின் நிதி நிலையை பாதிக்கிறது. ஒப்பந்தங்களை மறு பரிசீலனை செய்யக்கூடாது என மத்திய அரசின் புதிய விதி கூறுகிறது. சீனாவிலிருந்து, சூரிய ஒளி மின்சக்தி சாதனங்கள் இறக்குமதி செய்ய தடைவிதிக்கப்பட்டிருப்பதால் சூரிய ஒளி மின் சக்தியின் விலை உயரும்.

தனியார் பங்களிப்பு இருந்தால்தான் நாடு முன்னேறும் என்பது மத்திய அரசின் கொள்கையாக இருக்கிறது.

பொர். சா. கண்ணன்
முன்னாள் துணைத் தலைவர், சிவில்

# Unite Against Privatisation

***Oppose the Privatisation of Electricity Distribution!***
***Eleventh meeting organised by Kamgar Ekta Committee in the series***
***"Unite Against Privatisation!"***

Kamgar Ekta Committee (KEC) organised a public meeting on 25 April 2021 to oppose privatisation of electricity distribution.This was the 11th meeting in the series "Unite against Privatisation". Previous meetings dealt with privatisation of railways, banks, insurance, coal, petroleum, port & docks, education sectors. These meetings are being organised with the aim of bringing together various unions and federations of public sectors in a common struggle against privatisation.

Welcoming the speakers and participants, Com Mathew, Secretary of KEC, said we are meeting at a time of a national Covid pandemic crisis which was entirely due to the negligence of the Central government. Thousands of frontline workers from electricity, health, railways, banks, insurance, coal, steel and other sectors have fallen ill and also become fatal victims. But the workers from these sectors have continued their service to society, braving all these hardships.

Com Mathew invited Com Girish of KEC to give the first presentation. The presentation gave the background of electricity privatisation in the country and the experience of different states and territories. (See "Oppose the Privatisation of Electricity Distribution" Presentation by KEC).

The presentation was followed by the speeches of Shri Shailendra Dubey, President, All India Power Engineers Federation (AIPEF) & Convenor, Vidyut Karmachari Samyukta Sangharsh Samiti, UP, Com Mohan Sharma, Secretary General, All India Federation of Electricity Employees (AITUC) and President, Maharashtra State Electricity Workers Federation (AITUC), Com Prashanta Chowdhari, Secretary General of Electricity Employee's Federation of India (CITU), Shri Abhimanyu Dhankhar, Secretary General, All India Federation of Power Diploma Engineers and State President, Haryana State Electricity Board Diploma Engineers Association and Com Krushna Bhoyar, National Secretary, All India Federation of Electricity Employees (AITUC) and General Secretary, Maharashtra State Electricity Workers Federation (AITUC). The highlights of their speeches are given in the accompanying boxes.

Many speakers pointed out that taking advantage of this pandemic, the government is trying to pass the Electricity Amendment Bill 2021. It is due to opposition of all workers that these attacks of government have been successfully resisted. From state level unions to All India unions, all are opposing privatisation. In UP, workers have managed to stop electricity privatisation. Many strikes were carried out to stop privatisation in Maharashtra and all over India.

All public sector companies are facing privatisation. Workers of each sector are fighting vigorously. If all workers come together under one banner, we shall be able to halt the government's privatization program.

Speakers expressed the need to make consumers a part of the struggle against privatisation. For this, awareness about ill effects of privatisation has to be spread among the masses.

Speakers paid homage to electricity workers as well as engineers, who lost their lives while maintaining uninterrupted electricity to hospitals. Electricity officials and workers have been asked to work without providing them proper safety kits. Speakers demanded that electricity workers must be treated as frontline corona warriors by the central as well as all state governments and that the families of those who have lost their lives, must be suitably compensated.

Speakers thanked the KEC for organizing the series against privatization so that unity of various public sector workers could be built.

After the federation leader's speeches, a large number of participants also expressed their

views. A young activist of KEC made an audio-visual presentation where he showed the protests that took place in Kalwa, Thane, against privatisation of electricity distribution. Two and a half years back, KEC and LRS (Lok Raj Sangathan) came together along with other people's organisations to oppose the handing over of electricity distribution in Kalwa, Mumbra and Shil area to Torrent Power. Mass leaflet distribution was organised explaining about the ill effects of privatisation. People quickly understood and more than 5000 signatures could be collected in a few days. A 10 km long morcha from Kharegaon to Kalwa was also organised. As a result of this, the government had to put a stay on Torrent for a year. But, during last year's lockdown, the government handed it over to Torrent. The campaign also showed that major political parties cannot be relied upon in these fights. Congress, NCP and Shiv Sena were in the opposition in the Assembly at the time of the agitation and supported it, but after coming to power, they are implementing the very same privatisation agenda!

The active interventions of many others and their enthusiasm extended the meeting to nearly four hours. Concluding the meeting Com Mathew announced that the next meeting in the series against privatisation, the 12th meeting will be against the privatisation of Rashtriya Ispat Nigam Limited (RINL), Vishakhapatnam.

**Highlights of the speech of Shri Shailendra Dubey, President, All India Power Engineers Federation (AIPEF) & Convenor, Vidyut Karmachari Samyukt Sangharsh Samiti, UP**

The breaking up of State Electricity Boards (SEB's) into generation, transmission and distribution companies that began nearly two decades back was just an intermediate step towards privatisation.

Since 1999 Odisha Electricity Distribution went from public to private and back to public and then again back to private in 2020! The government has continued in its effort of privatization despite repeated failures of private companies to fulfil their commitments. Transmission and Distribution (T&D) losses did not come down nor were the promised capital investments made. On the contrary, the government had to incur heavy losses when it was forced to take the distribution back in its hands.

Another privatisation model has been to hand over the distribution business in certain areas, especially urban pockets, to private entities, called franchisees. The experience with franchisees between 2007 and 2012 has been disastrous in most cases. Only in Bhiwandi in Maharashtra has it been declared "successful". The "success" in Bhiwandi has been achieved at the cost of customers and workers. Customers are over billed by Torrent and customers have complained that the company uses musclemen to recover dues. Most of the workers are hired on contract, and made to work without any safety equipment. A large number of such workers have died of electrocution.

In Agra, after the takeover by Torrent, AT&C losses increased from 58.77% to 61.44% in 2010–11. In Aurangabad and Jalgaon, the franchise awarded to GTL Ltd and Crompton Greaves Ltd respectively had to be cancelled due to non payment of dues to the Discom. In Nagpur and Kanpur, the franchise awarded to Crompton Greaves Ltd and Torrent Power Ltd respectively had to be cancelled due to delay in takeover. In Ujjain, the franchise awarded to Essel Utilities had to be cancelled due to poor service quality and protests from customers. In Ranchi and Jamshedpur, the franchise awarded to CESC Ltd and Tata Power Ltd had to be cancelled due to delay in execution.

Another method introduced by the Central Government to promote privatisation is to allow parallel licensing. This was first introduced in Mumbai where consumers can choose their power supplier. Such a choice is claimed to lead to competition which increases efficiency and lowers tariffs. However, in actual practice the operation of parallel licensing in Mumbai has resulted in opposite results with skyrocketing expenses, steep consumer tariffs and regulatory failures. Today the average tariffs of all DISCOMs in Mumbai are high and changing the supplier has not resulted in consumer benefits.

The new Electricity Amendment bill 2021 is expected to further boost parallel licensing even though the experience in Mumbai has been totally unsatisfactory.

**Highlights of speech of Com Mohan Sharma, Secretary General, All India Federation of Electricity Employees (AITUC) and President, Maharashtra State Electricity Workers Federation (AITUC)**

Over the past 4 years our Federation has taken a number of initiatives to inform electricity workers as well as customers about dangers of privatisation of electricity distribution by distributing thousands of booklets. We wrote to MPs and CMs of various states all over the country and told them about all the ill effects of privatisation of electricity distribution.

In Maharashtra, the Federation distributed 25,000 leaflets to consumers against the privatisation of electricity distribution in Kalwa, Mumbra region. This franchise model is not beneficial for consumers but the government has turned a blind eye to it.

This bill has clearly been made to benefit the corporate houses like Reliance and Tata.

**Highlights of speech of Comrade Prashanta Chowdhari, Secretary General of Electricity Employees' Federation of India (CITU)**

The public sector was created as our capitalists were very weak at the time of independence to invest in capital-intensive industries such as electricity, railways, steel, coal, oil, telecom, aviation, port, etc. These sectors were funded by public money and developed. All high-tension electricity lines were developed and electricity generation capacity increased tremendously.

Now Indian capitalists have grown large enough to handle these sectors, whether electricity, railway and other sectors. When the Narsimha Rao government announced the new economic policy of privatization, liberalization and globalization in 1992, he claimed that the government is not having money so we need to invite private investment to get money. But in reality, companies from India and abroad invested very little of their money. It was Indian people's money which was used, through bank loans. Whenever these private companies are in trouble, government companies are asked to save them and it's exactly opposite for government companies. For example, BSNL is in trouble but the government is in no hurry to save it.

Now this cooked food is being served to capitalists for increasing their capital. This is how they are accumulating capital.

State Electricity Boards were asked to extend the electricity from cities to the remotest area of the country at the fastest speed, not only for the rich and for industries but also for the poor, the villagers and agricultural power. The Electricity Boards helped in bringing about the green revolution. Now they are being told that they are useless as they couldn't make profit so they should be privatized.

Electricity Boards, railway and steel and other public sectors may not have made profit. But again, profit for whom? Profit for one company, profit for state or for the Indian economy?

As per the 2021 Electricity Amendment the right of our farmers to electricity is being slashed.

**Highlights of the speech of Shri Abhimanyu Dhankhar, Secretary General, All India Federation of Power Diploma Engineers and State President, Haryana State Electricity Board Diploma Engineers Association**.

The government has been trying to amend the Electricity Act since 2014 but could not succeed due to united opposition of electricity workers. The Amendment brought in 2021 is the fifth attempt and is being pushed without consultation with workers or consumers or states.

This government is working at the behest of capitalists. All the provisions which are mentioned in the Standard Bidding Document (SBD), brought out in 2020, are only for benefits of monopoly capitalists.

In the meeting of 17th Feb, 2021, the Energy Minister said that inefficiency of discoms is the main reason for loss and not the government policy. It is difficult to understand how private players will bring the existing system to profit. As mentioned in the SBD the government is planning to provide private payers the kind of facilities that are not given to state-owned distribution companies, and yet the government wants them to compete with private players!

The Electricity Act 2003 was supposed to result in “cheaper power for all” but the tariff was

revised 7 times in Delhi since privatization.

The real purpose of the Electricity Amendment Bill 2021 is not just about providing the choice of electricity supply to the consumers after privatization but it is to allow non-discriminatory access to the existing infrastructure of discoms to private players. No private player will come in electricity distribution business to spend money in electricity infrastructure.

Presently, private generating companies are trying to sell power to people directly but they don't have their own network. Now that all infrastructure has been built with public money, the super rich plan to reap profit out of it. The rent of land in use under state Discoms is huge at present market price but all these things are being envisaged to be given at rate of one rupee per month to monopolistic private super rich houses.

It is being said that state owned companies won't vanish but BSNL's example tells the reality. All private companies got 4G but BSNL didn't get it. Private companies used BSNL infrastructure and have become super rich.

Similarly, they are eyeing electricity distribution. They aim to replace government monopoly with private monopoly.

**Highlights of speech of Com Krushna Bhoyar, National Secretary, All India Federation of Electricity Employees (AITUC) and General Secretary, Maharashtra State Electricity Workers Federation (AITUC)**

There are more than 15 lakh workers including those who work for contractors. Whether BJP or Congress, their policies are same. Electricity was the first sector which was proposed for privatization in 1990 and it was done through the Enron project. Electricity workers opposed it and due to the huge opposition, they had to cancel it but later they revived it again.

Today large-scale privatisation of electricity generation has been done. They are generating more than 176,000 MW (including thermal, wind and solar). At present, there is a surplus production of electricity of 100,000 MW. No one is purchasing this electricity and its cost is borne by the government distribution companies. Many a time government owned generation companies are stopped from generating electricity in order to purchase electricity from private electricity generating companies, despite their higher price. In Maharashtra, out of Rs. 86000 crores revenue collected by DISCOMs, 85% goes into purchase of electricity and the rest is used for paying employees and maintaining infrastructure.

Electricity bill amendments have been brought to ensure that private monopoly capitalists can enrich themselves through distribution. Governments are fulfilling the agenda of monopoly capitalists.

**- Shri Abhimanyu Dhankhar**,
Secretary General,
All India Federation of Power Diploma Engineers


தந்தையானார் வாழ்த்துகிறோம்

பொர்.P.பரமேஸ்வரன்
தொழில் நுட்ப உதவியாளர்
ஆலந்தூர் CMRL துணை மின் நிலையம், பொருளாளர் / சென்னை
தெற்கு கிளை அவர்கள் 30.04.2021 அன்று
பெண் மகவுக்கு தந்தையானார்.

செல்வ மகள் அனைத்து செல்வங்களையும் பெற்று வாழ
பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது.
மின் அலை வளர்ச்சி நிதி ரூ.1000/– அளித்துள்ளார், நன்றி

அன்புள்ள பொறியாளர்களே,

வாரிய பணியில் உள்ள அனைவருக்கும் விடுப்பு என்பது மிகவும் இன்றியமையாததாகும். நமது தமிழ்நாடு மின்சாரவாரியம் Section 79-(C) Electricity Act 1948-ன்படி Tamil Nadu Electricity Board Leave Regulation என்பது உருவாக்கப்பட்டு 10.06.1967 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி வாரிய பணியாளர்கள் அனைவரும் கீழ்கண்ட விடுப்புகளை தகுந்த நேரத்தில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

1) Casual Leave, 2) Compensation Leave, 3) Earned Leave, 4) Un-earned Leave (Leave on Private affairs or leave on Medical Certificate, 5) Extraordinary Leave, 6) Special Disability Leave, 7) Study Leave, 8) Maternity Leave.

**1) Casual Leave:** TANGEDCO மற்றும் TANTRANSCO-வில் பணிபுரியும் மூன்றாம்நிலை பணியாளர்கள் வரை சிறு விடுப்பு 15 நாட்கள் ஆகும். இரண்டாம்நிலை மற்றும் முதல்நிலை அதிகாரிகளுக்கு 12 நாட்கள் சிறு விடுப்பும் 3 நாட்கள் வரையறுக்கப்பட்ட (R.H.) விடுப்பும் எடுத்துக் கொள்ளலாம். வரையறுக்கப்பட்ட விடுப்பிற்கான பட்டியல் ஒவ்வொரு வருடமும் வாரியத்தால் வெளியிடப்படுகிறது இதை நாம் பயன்படுத்திக் கொள்ளளலாம்.

**2) Compensation Leave:** ஈடுகட்டும் விடுப்பு என்பது வாரிய விடுமுறை நாட்களில் முக்கிய பணிக்காக வர நேர்ந்தால் அதனை வேறு அலுவல் நாட்களில் நமக்கு தேவையான நாட்களில் ஆறு மாதத்திற்குள் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம். இந்த ஈடுகட்டும் விடுப்பு வருடத்தில் சிறுவிடுப்பு நாட்களை (15 நாட்கள்) விட அதிகமாக எடுக்கக்கூடாது என்பது வாரிய விதிமுறையாகும். சிறுவிடுப்போ அல்லது ஈடுகட்டும் விடுப்போ நாம் நம் மேல் அதிகாரியிடம் அளிக்கும்போது அதை அவர் ஏற்றுக் கொள்வதும் அல்லது முக்கிய வாரிய பணியிருப்பின் அதை நிராகரிப்பதும் அவரது அதிகார வரம்பிற்குள் வருகிறது.

**3) Earned Leave:** தகுதிகாண் பருவம் முடிந்தபின் ஈட்டிய விடுப்பு என்பது நாம் பணிபுரியும் ஒவ்வொரு 11 நாட்களுக்கும் 1 நாள் ஈட்டிய விடுப்பு நம் கணக்கில் சேரும். ஒரு வருடம் 33 நாட்கள் ஈட்டிய விடுப்பு நம் கணக்கில் சேரும். தகுதிகாண் பருவத்தில் நாம் பணிபுரியும் 22 நாட்களுக்கு ஒரு நாள் ஈட்டிய விடுப்பு நம் கணக்கில் சேரும இந்த ஒரு வருடத்தில் மருத்துவ விடுப்போ, ஈட்டிய விடுப்போ, சம்பளமில்லா விடுப்போ எடுத்தால் நாம் எடுக்கும் விடுப்பு நாட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இந்த 33 நாட்களில் மாறுபடலாம். இந்த ஈட்டிய விடுப்பை சேமித்து வைத்து நாம் வருடம் ஒருமுறை 15 நாட்கள் ஒப்பிவித்து அன்றைய தேதியில் 15 நாட்களுக்கான சம்பளத்தொகையினையோ அல்லது இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை 30 நாட்கள் ஒப்பிவித்து அன்றைய தேதியில் 30 நாட்களுக்கான சம்பளத்தைதொகையினையோ பெற்றுக் கொள்ளலாம். நம் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பு 240 நாட்களை கடந்தால் அது 240 நாட்களாகவே கணக்கில் கொள்ளப்படும்.

மேலும், இந்த ஈட்டிய விடுப்பை நம் பணிக்காலம் முழுவதும் சேர்த்து 8 மாதங்களுக்கான (240 நாட்கள்) விடுப்பை பணி ஓய்வு பெறும்போது ஒப்புவித்து அன்றைய தேதியில் நம் சம்பளத்தின் எட்டு மாதத்திற்கான தொகையினை பெற்றுக் கொள்ளலாம். ஈட்டிய விடுப்பை வருடத்திற்கு நான்கு முறைக்கு மேல் எடுக்கக்கூடாது என்பது வாரிய விதிமுறையாகும் Memorandum (Per) No.8535/ A-18/ A-182/2021-1, dated: 22.02.2021. ஈட்டிய விடுப்பு விண்ணப்பத்தை 15 நாட்களுக்கு முன் அளித்து விடுப்பு தொடங்கும் முதல்நாள் proper relieving order பெற்றுக் கொள்ள வேண்டும். பணியிட மாறுதலின் போது (விருப்ப மாறுதல் தவிர) 8 கிலோ மீட்டருக்கு மேல் பணியிடம் (ஒரே மாநகராட்சி/நகராட்சி தவிர) மாறுதலினால் 7 நாட்கள் பணியேற்பு காலமாக விடுப்பு எடுத்துக் கொள்ளலாம். 7 நாட்களுக்கு முன்னதாக பணியேற்பு செய்தால் மீதமுள்ள நாட்கள் நமது விண்ணப்பத்தின்பேரில் ஈட்டிய விடுப்பில் கணக்கேற்றப்படும்.

**4) Un-earned Leave:** i) Leave on Private affairs
ii) Leave on Medical Certificate
என்று இரண்டு வகையுள்ளது.

Leave on private affairs: என்பது மொத்தமாக பணிக்காலம் முழுவதும் 180 நாட்கள் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் ஒருமுறை தொடர்ச்சியாக அதிகபட்சம் 90 நாட்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளலாம். பணிக்காலம் முடியும்போது இதில் மீதமுள்ள நாட்களுக்கு அரைச்சம்பளம் பணப்பயன் பெற்றுக் கொள்ளலாம். அரைச்சம்பளம் என்பது Basic pay 50% மற்றும் Allowances அனைத்தும் பெறலாம்.

Leave on Medical Certificate: மருத்துவ விடுப்பு என்பது நம் ஒவ்வொருவருக்கும் மொத்த பணிகாலத்திற்கும் 18 மாதங்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடுப்பை நாம் மருத்துவரின் பரிந்துரையின்பேரில் எடுத்துக் கொள்ளலாம். இந்த விடுப்பை வருடத்தில் எத்தனைமுறை வேண்டுமானாலும் மருத்துவர் பரிந்துரையின்படி எடுத்துக் கொள்ளலாம். மருத்துவ விடுப்பு என்பது நமது மொத்த பணிக்காலத்திற்கும் சேர்த்து 540 நாட்கள் (இதில் 20 வருட பணி செய்தவர்கள் 360 நாட்கள் வரையிலும், அதற்கு மேல் பணி செய்தவர்கள் 540 நாட்கள் வரையிலும்) மருத்துவ சான்றிதழின் பேரில் ஒருமுறை 60 நாட்களுக்கு மிகாமல் விடுப்பு எடுக்கலாம். 60 நாட்களை தாண்டும் பட்சத்திலோ அல்லது தொடர்ச்சியாக காரணமின்றி விடுப்பு எடுப்பதாக உயர் அதிகாரி சந்தேகப்படும் பட்சத்தில் உங்கள் மருத்துவ விடுப்பு 60 நாட்களுக்குள் இருந்தாலும் உங்களின் மருத்துவ விடுப்பை Government Medical Board-க்கு பரிந்துரை செய்யலாம் என்பது வாரிய விதியாகும். அச்சூழலில் உங்களது மருத்துவ விடுப்பை மறுப்பதும், அனுமதிப்பதும் அரசு மருத்துவ குழுவின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும்.

**5) Extraordinary Leave** என்பது TNEB Leave Regulation 19(a)-ஐ பின்பற்றி Tuberculosis or Leprosy போன்றவற்றிற்கு சிகிச்சை எடுக்க மருத்துவரின் Medical Certificate –ஐ பின்பற்றி வழங்கப்படும் விடுப்பாகும். இந்த விடுப்பை நோய் குணமாகும் வரை அல்லது அதிகபட்சமாக 12 மாதங்கள் வரை எடுக்கலாம்.

**6) Special Disability Leave** என்பது TNEB Leave Regulation 22(1),(2),(3)-ஐ பின்பற்றி பணியாளர்கள் பணியின்போது எதிர்பாராத விதமாக விபத்தில் அடிபடும்போதோ, காயமடையும் போதோ, அவர் தொடர்ந்து பணிபுரிய முடியாத சூழ்நிலையில் சிகிச்சை எடுக்கும்போது வாரிய தலைவர் இந்த விடுப்பை Medical Board Certificate –ஐ பின்பற்றி அதிகபட்சமாக 24 மாதங்கள் வரை அளிக்கலாம்.

**7) Leave for Foreign Service:** சம்பளமில்லா விடுப்பாக வெளிநாடுகளுக்கு சென்றுபணி செய்வதற்கு நாம் விடுப்பு எடுத்துக் கொள்ளலாம். வெளிநாடு சென்று பணிசெய்ய சம்பளமில்லா விடுப்பாக 5 வருடங்கள் வரை தொடர்ச்சியாகவோ அல்லது பிரித்தோ எடுத்துக் கொள்ளலாம். முதலில் ஒரு வருடத்திற்கு அனுமதியும் பின்பு அந்த அனுமதியை அடுத்த வருடத்திற்கு நீட்டிப்பு செய்து பெற்றுக் கொள்ளலாம். இந்த விடுப்பை எடுக்க எந்த நாட்டில் பணிசெய்ய போகிறோம், எந்த கம்பெனி, என்ன வேலை எவ்வளவு நாட்கள் ஒப்பந்தம், பணி நியமன/ஒப்பந்த ஆணை போன்ற விவரங்களுடன், Photo, Format மற்றும் Leave Sanction மற்றும் permission ஆகியவற்றை இரண்டாம்நிலை பணித்தொகுதி அலுவலர்கள் வரை தலைமை பொறியாளர்/பணியமைப்பு அவர்களிடமும் முதல்நிலை பணித்தொகுதி(Class-I) அதிகாரிகளுக்கு செயலாளர்/TANGEDCO அவர்களிடமும் பெறவேண்டும்.

இவ்வாறு அயல்பணிக்கு செல்லும்போது நமக்கு ஆண்டு ஊதிய உயர்வு மட்டும் நிறுத்தப்படும் மற்றபடி நம்முடைய seniority அப்படியே தொடரும்.

**8) Study Leave:** TNEB Leave Regulations (25) –ன்படி சம்பளமில்லா விடுப்பாக படிப்பதற்காக பணியாளரின் Seniority பாதிக்காமல் 24 மாதங்கள் வரை சம்பளமில்லா விடுப்பாக. study leave

எடுத்துக் கொள்ளலாம். Study leave என்பதை பணியில் இருந்ததாகக் கணக்கிட்டு promotion, pension மற்றும் seniority-க்கு பயன்படுத்தலாம் என்று Regulations (39) TNEB Service Regulations கூறுகிறது.

**9) Maternity Leave:** TNEB Leave Regulation (24)-ன்படி மகளிருக்கான பேறுகால விடுப்பாக 9 மாதங்கள் சம்பளத்துடன் கூடிய விடுப்பாக எடுத்துக் கொள்ளலாம். இதை பிரசவத்திற்கு முன்போ அல்லது பின்போ எடுத்துக்கொள்ளலாம். இந்த விடுப்பை முதல் இரண்டு குழந்தை பிறப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம். Medical Termination of Preganancy Act-1971, (Central Act 30 of 1971) under sub-regulations(2), (3) and (4) –ன்படி Natural Abartion/Medical termination-க்கு 6 வாரங்கள் வரை திருமணமான பெண் பணியாளருக்கு அதிகபட்சமாக மூன்றுமுறை எடுத்துக் கொள்ளலாம்.

**10) Special Casual Leave for Chemotheraphy/Radiotheraphy** புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கதிரியக்க சிகிச்சை பெறுவதற்கு ஒவ்வொரு முறையும் பத்து நாட்கள் சிறப்பு விடுப்பாக எடுத்துக் கொள்ளலாம். (PER) FB TANGEDCO PROCEEDINGS NO.19, Dated 03.06.2020.

**Special Casual Leave :** வாரிய பணியாளர் Chicken-pox 7 நாட்கள், Measles 7 நாட்கள், Swine flu (category C) 7 முதல் 10 நாட்கள், Plague 10 நாட்கள், Rabies 10 நாட்கள் ஆகிய இவற்றை Municipality Health Officer/ Corporation Health Officer/District Health Officer (DDHS) ஆகியோரின் சான்றுரையின்படி (Certificate) Special Casual Leave எடுத்துக் கொள்ளலாம். (Per) CMD TANGEDCO PROCEEDINGS NO.138, Dated 27th May 2017.

**Special Casual Leave for sports :** வாரிய பணியாளர் Sports events-ல் கலந்து கொள்ள வருடத்திற்கு 30 நாட்களுக்கு மிகாமல் Special Casual Leave-எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு Special Casual Leave எடுக்கும்போது அதற்கு முன்போ, பின்போ அல்லது முன்பின் இரண்டிலுமே வாரிய விடுமுறை நாட்களை இணைத்து எடுக்கலாம்.

**11) COVID-19 Special Casual Leave:** தற்போது COVID-19 கொரானா தொற்று அதிக பாதிப்புகளை ஏற்படுத்தும் சூழ்நிலையில் இதனால் பாதிக்கப்படும் பணியாளர், பணியாளர் குடும்பத்தில் உள்ளோர் அல்லது அவர் வசிக்கும் பகுதியில் கொரானாவால் பாதிக்கப்பட்டு அவர் வசிக்கும் பகுதி தடைசெய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டாலோ அந்த காலத்திற்கு உரிய மருத்துவரிடம் சான்று பெற்று சிகிச்சை காலம் முழுவதும் சிறப்பு தற்செயல் விடுப்பாக எடுத்துக் கொள்ளலாம் (Per) CMD TANGEDCO Proceedings No.32, dated 11.02.2021.

பொர்.இரா.சந்தோஷ்குமார்,M.E., M.C.A., MBA.,
ஆசிரியர் குழு உறுப்பினர் / மின்அலை

## Inter-se-seniority

Inter-se-seniority of Assistant Engineers / Mechanical fixed for the year 2012 for 143 Engineers.

Ref : Memo. No. 027039/666/G15/151/2019-1, dated : 06.05.2021.

| SNo | Name | DOB | Present Circle | Date of Selection | Mode of Selection |
|---|---|---|---|---|---|
| 1. | SRIDHAR.M | 15.06.1971 | NCTPS-II | Dec-12 | I.S |
| 143. | SENTHILKUMAR.M | 25.05.1972 | G.C/KUNDAH | Nov-12 | R.D |

Full list in TNEB Engineers' Sangam website.

Let the waters settle
and you will see the moon
and the stars mirrored in your own being.

# மின் விபத்தினை தடுப்போம்...!

முனைவர் சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மண்டல செயலாளர் / திருச்சி

**தொடர்–5**

**மின் விபத்திற்கான காரணங்கள்!**

மின் விபத்திற்கான காரணங்கள் நான்கு பெரிய பிரிவின் கீழ் வகைப்படுத்தப் படுகிறது, அவை:

1. பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிக்காமை (Non adoption of safety rules)
2. பாதுகாப்பு சாதனங்களை பயன்படுத்தாமை (Non adoption of safety equipments)
3. முறையாக LC எடுத்து வேலை செய்யாமை (Improper Line Clear)
4. முறையற்ற அமைப்பு (Non standard Construction)

**பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிக்காமை:**

ஐந்தெழுத்து மந்திரமான (A to E) என்ற பாதுகாப்பு விதிகளை கடைபிடிக்காததால் தான் பெரும்பாலான விபத்துக்கள் நடக்கின்றன என்பதே உண்மை.

**ஐந்தெழுத்து மந்திரம்:**

**A**– Awareness **(விழிப்புணர்வு அடைதல்)**

**B**- Break the Supply **(மின்சாரம் துண்டித்தல்)**

**C**- Confirmation **(மின்சாரம் இல்லை என்பதை உறுதி செய்தல்)**

**D**- Discharge **(மின்சாரத்தை வெளியேற்றுதல்)**

**E**- Earthing **(நில இணைப்பு செய்தல்)**

**A– Awareness (விழிப்புணர்வு அடைதல்)**

எந்த ஒரு செயலும் விழிப்புணர்வு இல்லாமல் செய்தால் அது சிறப்பாக இருக்காது. மேலும் அது ஆபத்தாகவும் முடிந்துவிடும். விழிப்புணர்வு என்பது உங்கள் ஆழ்மனதின் (sub conscious mind) எப்போழுதும் எச்சரிக்கையுடன் அனிச்சை செயலாக செயல்படுவது ஆகும். இதனை தொடரின் முதல் பகுதியில் விரிவாக பேசியுள்ளோம். ஆழ் மனது உங்களின் ஒரு சரியான வேலையாள் போன்றது. நீங்கள் அதனை சரியாக பழக்கி விட்டால் (கவனிக்க அதனிடம் சொல்லிவிட்டால் அல்ல, பழக்கி விட்டால்) அது எப்போதும் சரியாக விழிப்புணர்வுடன் செயல்படும். உங்கள் புற மனதை (conscious mind) விழிப்புடன் செயல்பட வைக்கும். மின் பாதுகாப்பில் விழிப்புணர்வு என்பது நாம் வேலை செய்யப் போகும் மின்பாதை அல்லது மின் சாதனம் குறித்து பணி செய்யும் முன்பே முழுதாய் தெரிந்து கொள்ளுதல் என்பதாகும். எந்த மின்னூட்டி (feeder), எந்த மின் சாதனம் (equipment), எந்த துணை மின் நிலையம், எந்த திறப்பானை திறக்க வேண்டும் (which Breaker / switch to be opened), பின்னூட்டம் (back feeding) ஏதாவது வருவதற்கு வாய்ப்புள்ளதா?, உங்களை மேற்பார்வை செய்யும் நபர் யார்?, அவரோடு உங்களுடைய ஒத்திசைவு (coordination), தற்போதைய உங்களின் உடல் மற்றும் மன நிலை, இவை அனைத்தும் பணி செய்யும் முன்பே அறிந்து கொள்ள வேண்டும். மேலும் ஒவ்வொரு முறையும் பணி செய்யும் முன்பு உங்கள் மனதில் இதனை ஓடவிட்டு இவைகளுக்கு விடை கிடைத்த பின்னரே (இதற்கு சில

நிமிடங்கள் போதும்) பணி துவக்கப்பட வேண்டும். அப்போது தான் நீங்கள் முழு விழிப்புணர்வோடு இந்த பணியை செய்யப் போகிறீர்கள் என்று அர்த்தம். (இப்பொழுது சொல்லுங்கள் எத்தனை பேர் இந்த விழிப்புணர்வோடு பணி செய்ய செல்கிறோம்? !).

**B- Break the Supply (மின்சாரம் துண்டித்தல்)**

பணி செய்யும் முன்பு அந்த மின் தொடர் அல்லது சாதனத்திற்கு மின்சாரம் வருவதை துண்டிக்க வேண்டும். மீண்டும் சொல்கிறேன், மின்சாரத்தை நிறுத்துவது (switching off) வேறு, மின்சாரத்தை துண்டிப்பது (isolating) வேறு. இங்கு மின்சாரம் துண்டிக்கப்பட வேண்டும். பிரேக்கர் நிறுத்தப்பட்டிருந்தாலும் அதிலிருந்து வெளியே வரும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதா என்பது நமக்கு தெரியாது. அதனால் தான் இன்கமிங் மற்றும் அவுட்கோயிங் திறப்பான்கள்(switches) திறக்கப்பட வேண்டும். அதனால் மட்டுமே மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதை கண்களால் பார்த்து உறுதி செய்ய முடியும்.

**C- Confirmation (மின்சாரம் இல்லை என்பதை உறுதி செய்தல்)**

ஏற்கனவே கூறியதைப் போல், மின்சார திறப்பான்களின் அனைத்து கத்திகளும் பிரிந்திருப்பதை கண்களால் பார்த்ததின் மூலமே மின்சாரம் துண்டிக்கப்பட்டதை உறுதி செய்ய வேண்டும். மின் மாற்றியில் ஏறும் முன்பு ஒரு நிமிடம் நின்று நிதானித்து, மூன்று கத்திகளும் பிரிந்திருக்கின்றனவா? என்பதை ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ண வேண்டும். மின்சாரம் நின்று விட்டது என்பதை அருகில் எரிந்த மின் விளக்கு அணைந்து போனதை வைத்தோ, விசேஷ வீட்டில் பாடிக் கொண்டிருந்த ஒலிப்பெருக்கி நின்றதை வைத்தோ, அல்லது கம்பத்தில் ஏறி புறங்கையால் தட்டிப்பார்த்தோ உறுதி செய்வது அல்ல. அனைத்து கத்திகளும் பிரிந்திருக்கின்றனவா என்பதை கண்களால் பார்க்க வேண்டும், பின்னர் டிஸ்சார்ஜ் ராடு கொண்டே மின்சாரம் நிறுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

**D- Discharge (மின்சாரத்தை வெளியேற்றுதல்)**

மின்சாரம் துண்டிக்கப்பட்டாலும் மின் சாதனத்தில் அல்லது மின் பாதையில் கெபாசிட்டிவ் எஃபக்டால் அதில் மின்சாரம் இருக்க வாய்ப்புள்ளது. அது முதலில் டிஸ்சாஜ் ராடு கொண்டு வெளியேற்றப்பட வேண்டும். டிஸ்சாஜ் ராடு (டிஸ்சாஜ் ராடு தனியாக இல்லாத இடங்களில் எர்த் ராடையே இதற்கு பயன்படுத்தலாம்) போடுவதன் மூலம் மின்சாரம் இல்லை என்பதை உறுதி செய்துக் கொள்ள முடியும்.

**E- Earthing (நில இணைப்பு செய்தல்)**

டிஸ்சாஜ் செய்து மின்சாரம் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டாலும், யாரோ ஒருவர் செய்யும் தவறுகளால் அல்லது மேல் சொன்ன ஏதோ ஒரு விதியை கடைபிடிக்காத காரணத்தினால் அல்லது பின்னூட்டத்தினால் எப்போது வேண்டுமானாலும் மின்சாரம் வர வாய்ப்புள்ளது. எனவே தொடர்ந்து அந்த இடத்தில் பணி செய்யும் வரை அந்த இடத்தில் மின்சாரம் வரக்கூடாது என்பதற்காக நில இணைப்பான்கள் (earth rod) அனைத்து பக்கங்களிலும் (all ends) போட வேண்டும். மின் மாற்றியானால் HT மற்றும் LT யில் அனைத்து பீடர்களிலும் நில இணைப்பான்கள் (earth rod) போட வேண்டும். அப்பொழுது தான் நீங்கள் முழுப் பாதுகாப்புடன் பணி செய்யப் போகிறீர்கள் என்று அர்த்தம்.

மேல் சொன்ன ஐந்து மந்திரங்களில் இந்த Earthing (நில இணைப்பு செய்தல்) என்ற மந்திரமே முதன்மையானது. மேற்கண்ட விதிகளில் எதனையும் அலட்சியம் செய்யக் கூடாது எனினும், அப்படி விட்டிருந்தால் கடைசி வாய்ப்பாக Earthing (நில இணைப்பு

செய்தல்) செய்யும் போது காட்டி கொடுத்துவிடும். உங்கள் உயிரை கடைசி நேரத்தில் காப்பாற்றி விடும். அதனால் தான் **எர்த் ராடு எமனையும் வெல்லும்** என்று குறிப்பிடுகிறோம்.

எனவே வேலை செய்யும் இடத்தில், முழு விழிப்புணர்வோடு, மின்சாரத்தை துண்டித்து, மின்சாரம் இல்லை என்பதை அனைத்து விதங்களிலும் உறுதி செய்து, மின் பாதையை அல்லது மின் சாதனத்தை டிஸ்சார்ஜ் செய்து, அனைத்து பக்கங்களிலும் (all ends) நிலை இணைப்பான்கள் (earth rod) போட்டு பணி செய்தால் விபத்து ஏற்பட 99 சதவிகிதம் வாய்ப்பில்லை என்பதை நிஜம்.

சிந்திப்போம்.

## Extension of EE/EI panel Validity

**TAMILNADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

(ABSTRACT)

Establishment - TANGEDCO - Class I Service - Panel of AEEs/ Electrical suitable for promotion as EEs/ Electrical for the Year 2019-2020 - Extension of validity of Panel - Approved - Orders - Issued.

(SECRETARIAT BRANCH)

(Per.) CMD TANGEDCO Proceedings No.103 Dated the 6th May 2021

Chithirai 23 Pilava Varudam

Thiruvalluvar Andu - 2052.

READ :-

(Per.) CMD TANGEDCO Proceedings No.30(SB), dated the 27.02.2020

****

PROCEEDINGS:-

In the proceedings first read above, a panel consisting of 193 AEEs/ Electrical fit for promotion as EEs/ Electrical for the year 2019-2020 was issued, Out of which, 147 AEEs/ Electrical were promoted as EEs/ Electrical. The remaining 46 AEEs/ Electrical are yet to be promoted. Meantime, the validity of the above panel has ended on 26.02.2021.

2. Certain representations for extension on the validity of the above panel were examined.

3. After careful examination the validity of the above panel is hereby extended by six months or till a fresh panel is drawn.

(BY THE ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)

M.BHAVANI
SECRETARY

## Promotions

Junior Engineer/Civil II Grade to Junior Engineer/Civil I Grade promotions - Suitability report, DP & Service particulars Called for 2 Engineers.

Ref : Letter No.026817/380/G.4/G.4(1)/2021, dated:15.05.2021.

| Sl.No. | Name | D.O.B. | Present Circle |
|---|---|---|---|
| 1. | Ahamedkhan. P | 15.01.1972 | SE/Cvl. Pro. Dev. & Co-Ord. |
| 2. | Velmurugan.M | 27.02.1978 | GCC/Trichy |

Crucial Date :20.04.2021

Last Date for sending particulars : 05.06.2021

## THE NOBLE OFFICE BEARER



Beloved **Er. A.Venkatachalam,**AEE (Retd.) / Erode EDC passed away on **24.03.2021** suddenly due to cardiac arrest. The former Branch Secretary of Erode Branch had undergone a Heart operation a couple of years ago after retirement from Board's service. Despite being in medical attention we lost our beloved Engineer unbelievably.

Even though he was a bachelor in personal life he was married to Social Activities, to our Sangam in particular following its ethos in true spirit. A great disciple of beloved stalwarts late Er. PE.Sethupathy and Er. K.Krishnamoorthy, stood up to the occasion and took the baton of the Branch Secretary when the new Branch for Gobi Circle was formed during the year 2016. His experience in various other posts during the past years came in handy for him to shine in this coveted post.

The exuberance with which he organized the Mass Blood Donation on 02.10.2016 and the tenacity with which he followed it up during the social activities of our Sangam on 12.12.2017 and 12.12.2018 speaks volumes of his social work and commitment towards our activities. The tall contribution of his towards our Sangam's monumental Golden Jubilee Building shows his generosity towards our community.

He had the knack of collecting funds from the members for whatsoever requirement and always maintained a smooth and cordial relation with members and fellow office bearers. Having spent a major part of his service as Section Officer he maintained a healthy relationship not only with his subordinates but the general public too.

Post retirement from Board's service he kept himself busy serving our Diploma Community as a Regional Joint Secretary of TNEB Retired Engineers' Sangam despite his health condition. Apart from his service to our Diploma Community he did great noble work outside it serving the needy around his family and general public meeting out their educational expenses and much more.

In the demise of beloved Er. A.Venkatachalam we lost a great Samaritan who really loved and cared for everyone. Let us pray for this great person.

-Er.A.Antony Padovaraj
State President

## LOSS OF A TRUE WARRIOR



Beloved **Er. M.Shanmugam**, EE (Retd.) / Madurai EDC passed away on **01.05.**21. The news of his sudden demise was a shock totally as he was active and energetic until his departure. A technically sound person was a great asset, to not just the Board but our Sangam too.

Initially based at Ramnad he spread his Board stint at areas in and around the Southern region including Aruppukkottai, Paramakudi, Madurai and for a short period outside it in North Arcot district. Having served in APTS he had saved lot of revenue to the Board. An expert in handling Court Cases was a no nonsense trainer at TTC Madurai imparting his knowledge and experience to the Section Officers.

Having retired from Board's service few years ago he was actively involved in the activities of TNEB Retired Engineers'

Sangam with the same vigour and vibrance with which he served our TNEB Engineers' Sangam at various levels for more than three decades during his Board's service. Mingling with Office Bearers and Members irrespective of their age and cadre was his specialty.

His commitment and dedication towards the activities of our Sangam in the aftermath of 2008 was stupendous. The successful State General Council Meeting organized by Madurai Region at Madurai in 2013 under his stewardship speaks volumes of his great work. Not to forget his short and successful stint as Branch Secretary of Madurai Branch during the year 2016, rising to the occasion.

Sangam has lost one of its vibrant warriors in Madurai Region which is hard to be filled. While we offer our deepest condolences to the family of our deceased beloved Engineer our heartfelt prayers for the departed soul.

-Er.A.Antony Padovaraj
State President

## வெற்றிச் சிந்தனைகள்...!

முனைவர் சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மண்டல செயலாளர் / திருச்சி

தொடர்–7

அகந்தை அகற்றுவோம்!

மனிதனுக்கு இருக்கவே கூடாத ஒரு குணம் நான் என்கின்ற அகந்தை. இந்த குணம் தான் மற்றவர்களிடமிருந்து நம்மை தனிமைப்படுத்துகிறது. இதற்கு பெரும்பாலும் காரணம் உயர்வு மனப்பாண்மையே. ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு தனி திறமை உள்ளது, எனவே ஒரு மனிதன் தன்னை எதற்காகவும் தாழ்த்திக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் அதே நேரத்தில் தனக்கு மட்டுமே எல்லாம் தெரியும், தனக்கு மட்டுமே இவ்வளவு அறிவு இருக்கின்றது என்று நினைக்கும் போது தான் இந்த அகந்தை வருகிறது. மிகப் பெரிய மனிதர்களுக்கு கூட அவர்களை அறியாமல் இது சில நேரங்களில் வெளி வந்துவிடுகிறது என்பதும் உண்மை.

ஒரு நாள் பூங்காவில் ஒரு சிறுமி விளையாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது பெர்னாட்ஷா அந்த பூங்காவிற்கு வந்தார். அந்த சிறுமி தனியாக விளையாடுவதை பார்த்து "என்னையும் விளையாட்டிற்கு சேர்த்துக் கொள்வாயா?" என்று கேட்க சிறுமியும் சரி என்று கூற, அந்த சிறுமியும் பெர்னாட்ஷாவும் விளையாடி மகிழ்கின்றனர். அரை மணி நேரம் கழித்து அந்த சிறுமி பெர்னாட்ஷாவிடம் நேரமாகிவிட்டது, என் தாய் தேடுவாள், அதனால் "நான் வருகிறேன்" எனக் கூறிவிட்டு புறப்படுகிறாள். அப்போது பெர்னாட்ஷா அந்த சிறுமியிடம் உன் தாய் நீ யாருடன் விளையாடினாய் என்று கேட்டால் பெர்னாட்ஷாவுடன் விளையாடினேன் எனப் பெருமையோடு கூறு என்றாராம். அதற்கு அந்த சிறுமி, சரி அங்கிள், உங்கள் தாய் நீங்கள் யாருடன் விளையாடினாய் என்று கேட்டால் மேரியுடன் விளையாடினேன் என்று பெருமையாக கூறுங்கள் என்றாளாம்.

அந்த நொடியில் அழிந்தது எனது அகந்தை என்கிறார் பெர்னாட்ஷா.

எனவே அகந்தை அழிப்போம், அடுத்தவரை மதிப்போம், அப்போது தலைமை தேடிவரும் எதிலும்.

...தொடரும்

# கண்ணீர் அஞ்சலி

02.05.2021 **பொர்.M.ரவி** / உ.செ.பொறியாளர்/ பாலையூர் து.மி.நிலையம்/ தஞ்சை கிளை அவர்கள்,

03.05.2021 **பொர்.V.வெங்கடேசன்** / தொ.நு.உதவியாளர்/ M / AHP / NCTPS-1/ NCTPS கிளை அவர்கள்,

05.05.2021 **பொர்.T.S.ரகுராம்** / இளநிலை பொறியாளர்/ EM2 / MTPS-1/ MTPS கிளை அவர்கள்,

06.05.2021 **பொர்.K.சிவகுமார்** / உ.செ.பொறியாளர்/ NCTPS கிளை (முன்னாள் விருதுநகர் கிளை உறுப்பினர்) அவர்கள்,

07.05.2021 **பொர்.S.சீனிவாசன்** / இளநிலை பொறியாளர்/ குன்றாண்டார் கோயில் / புதுக்கோட்டை கிளை அவர்கள்,

10.05.2021 **பொர்.M.சுந்தரராஜன்** / இளநிலை பொறியாளர்/ வெள்ளை கேட் / காஞ்சிபுரம் கிளை அவர்கள்,

10.05.2021 **பொர்.K.சீனிவாசன்** / இளநிலை பொறியாளர்/ புதைவடம் / சென்னை வடக்கு கிளை அவர்கள்,

10.05.2021 **பொர். R. சண்முகம்** / உ.செ.பொறியாளர்/ O&E-1/ TTPS கிளை அவர்கள்,

13.05.2021 **பொர்.P.பாலசுப்பிரமணியம்** / உ.செ.பொறியாளர்/MRT / பல்லடம் / திருப்பூர் கிளை அவர்கள்,

13.05.2021 **பொர்.J.சர்க்கரை** / இளநிலை பொறியாளர் / பென்னாடம் கிழக்கு / கோட்ட செயலாளர் / திட்டகுடி கோட்டம் /கடலூர் கிளை அவர்கள்,

14.05.2021 **பொர்.K.அன்பரசு** / உ.செ.பொறியாளர் / 3வது பிரதான சாலை து.மி.நிலையம் / கிளைச் செயலாளர்/சென்னை மேற்கு கிளை, அலுவலகச் செயலாளர், பொறியாளர் சங்கம் அவர்கள்,

15.05.2021 **பொர்.P.மனோகரன்** / இளநிலை பொறியாளர் / மோட்சகுளம், விழுப்புரம் கிளை அவர்கள்,

15.05.2021 **பொர்.S.ஜெயகுமார்** / இளநிலை பொறியாளர் / மேல் ஆலத்தூர், திருப்பத்தூர் கிளை அவர்கள்,

17.05.2021 **பொர்.M.ஜெயஸ்ரீ** / உ.செ.பொறியாளர் / சிறப்பு பராமரிப்பு, கிருஷ்ணகிரி கிளை அவர்கள்,

17.05.2021 **பொர்.S.சிவக்குமார்** / செயற்பொறியாளர் / ஒட்டியம்பாக்கம் து.மி.நிலையம், சென்னை தெற்கு கிளை அவர்கள்,

**மறைந்தமைக்கு பொறியாளர் சங்கம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.**

19.04.2021 பொர்.G.கணேசன் / உ.செ.பொறியாளர்/ MP/MTPS-2, MTPS கிளை அவர்களின் **தந்தையார்.**

22.04.2021 பொர்.S.ஜோசப் எட்கர் / செயற்பொறியாளர்/ Commercial / தலைமையக கிளை அவர்களின் **தாயார்.**

26.04.2021 பொர்.G.கிரிராஜன் / கிளை பொருளாளர் / வேலூர் கிளை அவர்களின் **தந்தையார்.** 9445855112.

27.04.2021 பொர்.S.ஆறுமுகம் / உ.செ.பொறியாளர்/MRT/BBGTS/சென்னை மைய கிளை அவர்களின் **தந்தையார்.** 9994935536.

27.04.2021 பொர்.R.ரவிகுமார் / உதவி பொறியாளர்/ O&E /MTPS-1, MTPS கிளை அவர்களின் **மகள்.**

29.04.2021 பொர்.M.உலகநாதன் / இளநிலை பொறியாளர்/ மேற்கு / நெமிலி / வேலூர் கிளை அவர்களின் **தாயார்.** 7871727187.

29.04.2021 பொர்.S.நல்லார்கினியன் / உதவி பொறியாளர் / கிராமியம் / தருமபுரி கிளை அவர்களின் **தாயார்.** 9600728806.

01.05.2021 பொர்.U.கணேசன் / தொ.நு.உதவியாளர்/ M/AHP/TTPS கிளை அவர்களின் **தந்தையார்.**

# கண்ணீர் அஞ்சலி

06.05.2021 பொர்.V.இசக்கியம்மாள் / தொ.நு.உதவியாளர்/ மத்திய அலுவலகம் / திருநெல்வேலி கிளை அவர்களின் **தந்தையார்.**

06.05.2021 பொர்.M.மகேந்திரன் / இளநிலை பொறியாளர்/ காளி பிரிவு / நாகை கிளை அவர்களின் **தாயார்.** 9786403883.

07.05.2021 பொர்.A.ரங்கசாமி / இளநிலைப் பொறியாளர்/ அரகண்ட நல்லூர் / கள்ள குறிச்சி கிளை அவர்களின் **தாயார்.**

09.05.2021 பொர்.P.பிரேம்குமார் / இளநிலைப் பொறியாளர்-II/ புத்தனாம்பட்டி து.மி.நிலையம் / திருச்சி கிளை அவர்களின் **தந்தையார்.**

09.05.2021 பொர்.M.விக்னேஸ்வரி/ இளநிலைப் பொறியாளர் / வெள்ளக்கரை து.மி. நிலையம் / கடலூர் கிளை அவர்களின் **கணவர்.**

10.05.2021 பொர்.T.சுதாகர் / இளநிலைப் பொறியாளர்-II / நந்தனம் துணை மின் நிலையம் / சென்னை மையக் கிளை அவர்களின் **தந்தையார்.**9944357353.

10.05.2021 பொர்.R.ராதா / இளநிலை பொறியாளர்/ EM1 /MTPS-1, MTPS கிளை அவர்களின் **தாயார்.**

12.05.2021 பொர்.S.வேல்முருகன் / உதவி பொறியாளர் / கொளங்காநத்தம்/பெரம்பலூர் கிளை அவர்களின் **தந்தையார்.**

12.05.2021 பொர்.S.கண்ணன் / செயற் பொறியாளர்/ அரக்கோணம் / வேலூர் கிளை அவர்களின் **தாயார்.** 9994304179

13.05.2021 பொர். S. சத்தியபிராகசம் / பொதுக் குழு உறுப்பினர் / கள்ளக் குறிச்சி கிளை அவர்களின் **தாயார்.**9942702391.

13.05.2021 பொர்.S.ராகவன் / உ.செ. பொறியாளர் /TTDC/ திருநெல்வேலி கிளை அவர்களின் **தாயார்.** 9442147558.

13.05.2021 பொர்.M.குணசீலன் / தொ.நு.உதவியாளர்/ O&E /MTPS-1, MTPS கிளை அவர்களின் **தந்தையார்.**

14.05.2021 பொர்.M.ராமலட்சுமி / இளநிலை பொறியாளர் / ICHP / TTPS கிளை அவர்களின் **தந்தையார்.** 8667738023.

14.05.2021 பொர்.S.பாலசுப்பிரமணியன்/ உ.செ பொறியாளர் / DSM / தலைமையகம் / தலைமையக கிளை அவர்களின் **தாயார்.** 9884992849

15.05.2021 பொர்.D.அந்தோணி சரண்தாஸ்/ உதவி பொறியாளர் /O&E-1/TTPS கிளை அவர்களின் **தந்தையார்.** 7598753293.

16.05.2021 பொர்.N.T.சிவக்குமார்/ உ.செ பொறியாளர்/ ஒட்டியம்பாக்கம் து.மி.நிலையம் / சென்னை தெற்கு கிளை அவர்களின் **தாயார்.**

17.05.2021 பொர்.T.இளையராஜா / உதவிப் பொறியாளர் / சூளகிரி / கிளை பொருளாளர்/ கிருஷ்ணகிரி கிளை அவர்களின் **தாயார்.**

17.05.2021 பொர்.T.K.கண்ணன் / உ.செ பொறியாளர்/ குழித்துறை/ கண்ணியாகுமரி கிளை அவர்களின் **தந்தையார்.** 9444186490.

17.05.2021 பொர்.S.K.சுஜிசெல்வமலர் / இளநிலைப் பொறியாளர்-II/ O&E /MTPS-1, MTPS கிளை அவர்களின் **தந்தையார்.**

17.05.2021 பொர்.N.ராமன்/ உ.செ.பொறியாளர்I/ சிவகங்கை து.மி.நிலையம் / பொதுக் குழு உறுப்பினர் / சிவகங்கை கிளை அவர்களின் **தந்தையார்.** 9442051126

18.05.2021 பொர்.K.ஜெயலட்சுமி / உதவிப் பொறியாளர்/ மல்ல சமுத்திரம் / நாமக்கல் கிளை அவர்களின் **கணவர்.**

18.05.2021 பொர்.C.தனம் / இளநிலைப் பொறியாளர்-II / UPCL துணை மின் நிலையம் /கல்லா மொழி/ கோட்டச் செயலாளர்/ திருச்செந்தூர் கோட்டம் / தூத்துகுடி கிளை அவர்களின் **கணவர்.** 9688730309.

18.05.2021 பொர்.A.P.ராகேஷ்/ கிளைச் செயலாளர்/ சென்னை மையக் கிளை, பொருளாளர், காமதேனு நலநிதி அவர்களின் **தாயார்.** 9710328131.

19.05.2021 பொர்.E.ஆனந்தன்/ உதவிப் பொறியாளர்/ R.K நகர்/ இணைச் செயலாளர் சென்னை வடக்கு கிளை அவர்களின் **தாயார்.** 8667029762.

19.05.2021 பொர்.J.கேத்தரின் இன்பா / இளநிலை பொறியாளர்/ செம்பியம் து.மி.நிலையம்/ சென்னை வடக்கு கிளை அவர்களின் **தந்தையார்.** 8682893461.

**ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தினரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.**

## *FOR SOME MOMENTS IN LIFE THERE ARE NO WORDS*

- David SeltzerIt's



It was one such moment for us on **14.05.21**.

The untimely demise of our **Office Secretary** beloved **Er. K.Anbarasu**, AEE., has totally left us shell shocked. It's not only unbearable but unbelievable too.

He was a great disciple of our former General Secretary late beloved Er. V.Ashok Kumar. Being a Gold medalist in studies throughout his career, he always wanted to be the first man to commit himself for our Sangam activity too, be it Building construction, Blood Donation and much much more.

He's been a big man with a Great heart, who never compromised on meeting arrangements and hospitality giving his best always. Once entrusted a task he'll turn into a youth, forgetting his age or Office position, giving his more than 100% commitment until the task is accomplished and without hesitation would always expect a feedback and appreciation of his work.

While the past few days has been overflowing with nonstop obituaries of our near and beloved this one has struck us like a thunder bolt. The departure of such a great, vibrant and active Office Bearer is a irreplaceable loss to our Sangam.

Our Prayers for the departed soul.

"God give strength to his family to tide over this tragic loss and come over this bereavement".

**A.Antony Padovaraj**



பெரம்பலூர் கிளை சங்க உறுப்பினர் மறைந்த பொர்.T.மணிவண்ணன், இளநிலைப் பொறியாளர் அவர்களது காமதேனு நலநிதி பணப்பயன் ரூ.3,00,000/– க்கான காசோலை அவரது குடும்பத்தாரிடம் பொறியாளர் சங்கத்தின் சார்பில் 03.05.2021 அன்று அவர்களது இல்லத்தில் பெரம்பலூர் கிளைப் பொறுப்பாளர்களால் வழங்கப்பட்டது.



தமிழகத்தின் மின்சாரம்,
மதுவிலக்கு
மற்றும் ஆயத்தீர்வை துறை
அமைச்சராக
பொறுப்பேற்றிருக்கும்

**திரு.V.செந்தில் பாலாஜி**

அவர்களை பொறியாளர் சங்கம்
வாழ்த்தி வரவேற்கிறது.



மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களை
தமிழக மின்வாரிய தொழிற்சங்கப் பொறுப்பாளர்கள் 11.05.2021
அன்று மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்



Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079. Edited by : N.R.Senthil